

# சைவத்தமிழ் கலாச்சார ஆய்வு மையம்

# டென்மார்க் வேல்முருகன் ஆலயம்

**Saiva Tamil Kultur & Forskning Center**

CVR. Nr.34661421

”மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

**Sorøvej 37, 4295 Stenlille, Denmark.**



18.02.2016. வியாழக்கிழமை. 17.30. அணியளவில் வேல்முருகன் ஆலயத்தில் 2014ம் ஆண்டு நிர்வாக சபையும் 2015ம் ஆண்டடு நிர்வாக உறுப்பினர்களும் கணக்குப்பரிசோதகர்களுடனான கலந்துரையாடல் கூட்டம்

2014 ஆண்டுக்கான கணக்குகள் விபரம் சம்பந்தமாக கணக்கு பரிசோதகர் திருவாளர் குகேந்திரமோகன் அவர்கள் இன்றைய கூட்டத்தில் கணக்கு சம்பந்தமாக சில குறை நிறைகள் திருத்தங்கள் இருப்பதாகவும் இனிவரும் காலங்களில் சரியான முறையில் எல்லா குறைகளையும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்து இதை நான் சொல்லுவதை இட்டு தன்னை குறை நினைக்கவேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

(1)ஒழுங்கான முறையில் பற்றுச்சீட்டகளின் இலக்கம் **(bilag.nr.)** ஆலய கணக்கு பதிவேட்டில் பதியப்படவேண்டும்.

(2)ஆலய கடன் கொடுப்பனவுகள் யாவும் ஒழுங்கான முறையில் பெயர் விபரங்களுடன் தெரியப்படுத்தப்படவேண்டும்.

(3)இனிவரும் காலங்களில் அசல் பற்றுச்சீட்டு இல்லாமல் வாங்கப்படும் சாமான்களுக்குறிய குறிக்கப்பட்ட பற்றுச்சீட்டுகள் எவ்வளவு தொகை என்பதை அறிந்து வாங்கியவர் உறுதிசெய்யப்பட்டு நிர்வாக சபை மூன்று உறுப்பினர்களாளும் உறுதிப்படுத்தப்படவேண்டும். இந்த அசல் பற்றுச்சீட்டுகள் இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் பற்றுச்சீட்டுகள் கொடுப்பனவு தொகை எவ்வளவு என்பதை நிர்வாக சபையே தீர்மாணிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

(4)வருடாந்தம் செலவுகளை குறைத்து ஆலய கடன்களை திருப்பி கொடுப்பதாக இருக்கவேண்டும் கடன்களை கூட்டிக்கொண்டு போகக்கூடாது. எனவும் தெரிவித்தார்

(5)ஒவ்வொரு வருடமும் வருடாந்த கணக்குகள் முடிவுற்ற பின்னர்தான் அடத்தவருடத்திற்கான கணக்குகள் ஆராயப்பட வேண்டும் ஏனென்றால் சென்ற வருடத்தின் கையிருப்புகள் வங்கியிருப்புகள் எவ்வளவு என்பதை அறிந்து அதன்படி புதிய வருடத்திற்கான கணக்ககள் ஆரம்பிப்பதற்கு இலகுவாக இருக்கும்.

(6)இந்தியா சென்று ஆலயத்திற்கு தேவையான சாமான்கள் வாங்குவதற்கு நிர்வாக சபையில் எடுக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

(7)இன்றைய ஆலய நிர்வாக சபை 2016 ஆண்டில் 150000 குரோணர்கள் கடன் கொடுப்பதென உறுதிசெய்துள்ளதை இட்டு மகிழ்சி அடைவதாகவும் இது முக்கியமான விடயமெனவும் தெரிவித்தார்.

(8)இந்தியாவில் இருந்து வந்த ஒரு கொண்டேணர் சாமான்களும் எப்படியான முறையில் எடுக்கப்பட்டது அதற்கான கப்பல் ஏற்றுமதி செலவுகள் சாமான்கள் பொதி செய்வதற்கான செலவு விபரங்கள் அடங்கிய பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படவேண்டும். அப்படி இந்த பற்றுச்சீட:டு சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பத்தில் இந்த பற்றுச்சிட்டின் தொகையில் (52185 குரோணர்) 50% பணம் **26092,50kr.** 2014ம் ஆணடு நிர்வாக சபை திருப்பிக்கட்டவேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் எதிர்வரும் காலங்களில் முக்கியமாக செயல்படுத்தப்பட வேண்டும்.எனவும் தெரிவித்தார் என்பது முக்கியம் பெறுகின்றது. இத்துடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

இந்த கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள்

நிர்வாக சபை உறுப்பினர்கள் 2014 - 2015

**K.**சிவகுருநாதன்

**K.**சக்திதாசன்

**B.**பவானந்தன்

**V.**அன்னலிங்கம்

**T.**அம்பிகைபாலன்

திருமதி. லெட்சுமிகாந்தன் (மாலா) (கணக்குப்பரிசோதகர் 2015)

திரு. குகேந்திரமோகன் (கணக்குப்பரிசோதகர் 2014 – 2015)